**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C. C. No. 91/2025** |
| Prosecution witness | : | P.W. 2 |
| List of witness | : | L.W. 2 |
| Name | : | ஆரோக்கிய மேரி |
| Father's /Husband Name | : | லாரன்ஸ் |
| Village | : | மணவாளநல்லூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 62 |
| Occupation | : | கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 15th day of May 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து கூலிவேலை செய்து வருகிறேன். டந்த 16.12.2024 ம்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நான் வீட்டு வாசலில் துணி காய போட்டு கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று ஒரு வாகனம் வந்து என்மீது மோதியது நான் வாகனம் மோதியதில் கீழே விழுந்துவிட்டேன். என்னை யார் மோதினார்கள் என்று பார்க்கவில்லை. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை பார்க்கவில்லை. நான் காயம்பட்டதில் மயக்கம் கொண்டு விழுந்து விட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 16.12.2024 ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நான் எனது வீட்டின் சாலை ஓரமாக துணி காயப்போட்டு கொண்டிருந்த போது பூந்தோட்டம் to நாச்சியார் கோவில் தார் சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 82 K 3008 HERO PLEASURE இருசக்கர வாகனத்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து என் மீது விபத்து ஏற்படுத்தினார் என்றும் அதில் எனக்கு தலையில் இரத்த

காயமும் நெஞ்சு பகுதியில் உள் காயமும் ஏற்பட்டது என்றும் காயம்பட்ட என்னை அங்கு நின்று கொண்டிருந்த அ.சா.1ம், ஜேம்ஸ் மற்றும் பிலிப்ஸ்ராஜ் என்பவரும் ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு திருவிழிமிழலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றும், பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், பின்னர் மருத்து வர் பரிந்துரையின் பேரில் மேல் சிகிச்சைக்கு தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனைக்கு அழைத்துசென்றார்கள் என்றும், அங்கு உள்நோயாளியாக சிகிச்சைபெற்று வீட்டிற்கு வந்தேன் என்றும், போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்தில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 11:30:49 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.